**செய்தி வெளியீடு எண்: 624** **நாள்:17.08.2021**

**<u>மாற்றுத்திறனாளிகள் நலத்துறை</u>**

**<u>பத்திரிக்கைச்செய்தி</u>**

**<u>மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனைக் குழு (State Advisory Board)</u>**

**<u>புதிய உறுப்பினர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் குறித்த அறிவிக்கை</u>**

மாற்றுத்திறனாளிகள் உரிமை சட்டம் 2016 மற்றும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் உரிமை விதிகள் 2018 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனைத் குழுவில் (State Advisory Board on Disability) உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. தற்போது இக்குழுவின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளதால் புதியதாக உறுப்பினர்கள் நியமிக்கப்பட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**புதியஉறுப்பினர்கள்** நியமிப்பது தொடர்பான விவரங்கள்

**<u>அட்டவணை –1</u>**

| **பதவிகள் / உறுப்பினர்கள்** | **விண்ணப்பங்கள் பெறும் மாவட்டங்கள்** |
|---|---|
| 1) மாநில அரசால் நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுப் பணியில் அனுபவம் உள்ள நிபுணத்துவமிக்க நபர்கள் – ஐந்து உறுப்பினர்கள்<br>Members to be nominated by the State Government:—<br>(*i*) five Members who are experts in the field of disability and rehabilitation; | அனைத்து மாவட்டங்கள் |
| 2) மாவட்டங்களில் இருந்து 5 பிரதிநிதிகள் (சுழற்சி முறையில்) five Members to be nominated by the State Government by rotation to represent the districts in such manner as may be prescribed: Provided that no nomination under this sub-clause shall be made except on the recommendation of the district administration concerned;<br>(ஏற்கனவே சென்னை, கடலூார், திருச்சிராப்பள்ளி, மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலிருந்து | மாவட்ட ஆட்சியர் ஒப்புதலுடன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலஅலுவலர் மூலமாக<br>**1.**திருவள்ளூர், காஞ்சிபுரம்<br><br>**2.**வேலூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், திருவண்ணாமலை, அரியலூர் மற்றும் பெரம்பலூர்<br><br>**3.** சிவகங்கை, கரூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை<br><br>**4.** திண்டுக்கல், தேனி, விருதுநகர், |

| | |
|---|---|
| உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதால் அம்மாவட்டங்கள் நீக்கப்பட்டுள்ளன) | இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி,<br><br>5. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி, சேலம், நாமக்கல், தர்மபுரி |
| 3) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றிலிருந்து 10 பிரதிநிதிகள் (இதில் பெண்கள்–5, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்–1, பழங்குடியினர்–1 உள்பட) (10 members from NGO's or Associations, including Women- 5, SC-1, ST-1)-Ten persons as far as practicable, being persons with disabilities, to represent non-Governmental Organisations or associations which are concerned with disabilities: Provided that out of the ten persons nominated under this clause, at least, five shall be women and at least one person each shall be from the Scheduled Castes and the Scheduled Tribes; | அனைத்து மாவட்டங்கள் |

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் உள்ளவற்றை பூர்த்தி செய்து 27.08.2021 அன்று மாலை 3.00 மணிக்குள், வரிசை எண்.2 ல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் அந்தந்த மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகங்களிலும், வரிசை எண்.1 மற்றும் வரிசை எண்.3 ஆகியவற்றிற்கு விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம் அல்லது மின்னஞ்சல் முகவரி (scd.tn@nic.in or lawofficerrpwd16@gmail.com) ஆகியவற்றில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்
/மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**